# ஆர்ஷ வித்யா

(ரிஷிகள் காட்டும் குறியும், நெறியும்)

**பூஜ்யஸ்ரீ ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி**

(தமிழாக்கம் ஸ்வாமினி ப்ரஹ்மலீனாநந்தா)

# ஆர்ஷ வித்யா

## (ரிஷிகள் காட்டும் குறியும், நெறியும்)

*'ஆர்ஷ வித்யா' என்றால் ரிஷிகள், முனிவர்கள் வழி வந்த அறிவுரை. ரிஷி என்ற சொல் 'ருஷ்' — அறிதல் என்ற பொருள் கொண்ட ஸம்ஸ்க்ருத வினைச் சொல்லிலிருந்து வந்துள்ளது. 'ரிஷி' என்றால் அறிபவர். அவர்களிடமிருந்து நமக்கு வந்த ஞானத்திற்கு 'ஆர்ஷ வித்யா' என்று பெயர்.*

### ஞானப் பிரவாஹம்

*ஆங்கிலத்தில் (mystic) 'மிஸ்டிக்*[1] *என்ற ஒரு சொல் உண்டு. அதற்கு தியானம், தவம் இவற்றின் மூலம் மறை பொருளை, மர்மமான பொருளை எவ்வாறோ உணர்ந்து கொண்டவர் என்று பொருள். இவ்வாறு உணர்ந்துகொண்ட ஒருவர் மற்றொரு மிஸ்டிக்-ஐ தோற்றுவிக்க முடியாது. அப்படி அவரால் தோற்றுவிக்க முடியும் என்றால், தான் உணர்ந்ததை அவரால் பிறருக்கு விளக்க முடியும் என்றாகிறது; அதாவது போதிப்பதற்கான உபாயம் அவரிடம் உள்ளது. அப்பொழுது அதில் மர்மம் - மிஸ்டரி ஏதும் இல்லை, அதாவது அவர் மிஸ்டிக் அல்ல. மிஸ்டிக் என்பவர்களுக்குப் பரம்பரை ஏதும் இருக்க முடியாது.*

*மாறாக, எங்கு போதனை, உபதேசம் செய்தல் என்பது உள்ளதோ, அங்கு ஒரு குரு-சிஷ்ய பரம்பரையைக் காணலாம். போதனா முறை ஒன்று இருப்பதால்,*

---

[1] இந்தச் சொல் மிஸ்டரி – மர்மம் என்பதுடன் சம்பந்தம் உள்ளது. பொதுவாக மிஸ்டிக் என்ற சொல் நம் நாட்டில் ஸித்தர் என்று கூறப்படும் சொல்லுக்கு இணையானது என்று கூறலாம்.

*ஒவ்வொரு குருவும் தான் அறிந்ததை தன் சிஷ்யனுக்குப் புரியவைக்க முடியும்; நாளடைவில் அவனையும் மற்றொரு குருவாக ஆக்க முடியும். இவ்வாறு ஒருவர் புத்தியிலிருந்து மற்றவர் புத்திக்கு இந்த ஞானமானது பாய்வதால், தொடர்பறாத குரு-சிஷ்ய பரம்பரை உருவாகிறது.*

*ஞானம் என்பதைப் பழமையானது, புராதனமானது, obsolete என்று ஒதுக்கித் தள்ள முடியாது. அதே சமயத்தில் அது நூதனமானதும் இல்லை. இன்று செல்லுபடியாகாது என்று அதைப் புறக்கணிக்க முடியாததால், அது புராதனமானது அல்ல. அதில் புதிதாகச் சேர்த்துக் கூறுவதற்கோ, மாற்றிக் கூறுவதற்கோ ஒன்றும் இல்லை என்பதால், அது நூதனமானதும் அல்ல. ஆதலால், கங்கை நதியைப் போல் ஞானம் குரு - சிஷ்யன் என்று தொடர்ந்து வந்துக் கொண்டிருப்பதால், அது என்றும் புதுமை குன்றாததாக உள்ளது.*

*கங்கை ஒரு புராதனமான நதி. அது எப்பொழுது இந்த பூவுலகில் ஓடத் துவங்கினது என்பது ஒருவருக்கும் தெரியாது. பகீரதன் என்ற அரசன் கடுந்தவம் புரிந்து, கங்கையை வானுலகிலிருந்து பூவுலகத்திற்குக் கொண்டு வந்தான் என்ற கதை நாம் அனைவரும் அறிந்ததே. அது மிகப் பழமையான நதி என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், அதில் நாம் மூழ்கி எழுந்தால், நீரும் புதியதாக இருக்கிறது, நம் உடலுக்கும் புத்துணர்ச்சி அளிக்கிறது. அது மட்டுமல்ல, கங்கையின் புனிதத்தன்மையில் நம்பிக்கை உடையவர்களுக்கு அதில் நீராடுவது உடலை மட்டுமல்லாது, உள்ளத்தையும் தூய்மை யாக்குகிறது. கங்கையில் நீராடுவதால் தாம் செய்த தீவினைப் பயன்கள் கழிந்து விடுகின்றன என்ற நம்பிக்கை உடையவர்கள் கங்கையைப் பார்க்கும் கண்ணோட்டமே வித்தியாசமானது. அவர்களுக்கு கங்கை ஒரு நதி மட்டுமல்ல; தொட்ட மாத்திரத்தில் புனிதமாக்கும் ஞான கங்கை ஆகிறாள்!*

'ந ஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ரம் இஹ வித்யதே' - இந்த உலகத்தில் ஞானத்திற்கு ஈடாகப் பவித்ரமானது, அதாவது ஞானத்திற்கு ஒப்பாக தூய்மையானதோ, தூய்மையாக்குவதோ வேறு ஒன்றுமே இல்லை. ஆதலால் ஆர்ஷ வித்யா எனப்படும் இந்த ஞானம் ஒரு நதிப் பிரவாஹத்தைப் போல் குருவிடமிருந்து சிஷ்யனுக்கு, அவனுடைய சிஷ்யனுக்கு, பிறகு அவனுடைய சிஷ்யனுக்கு என்று ஞானப் பிரவாஹமாக வந்து கொண்டே இருக்கிறது. இனியும் சென்று கொண்டே இருக்கும்.

ஞானம், அறிவு என்பது எப்பொழுதும் அறிவின் விஷயத்திற்கு ஏற்ப இருக்கும். அதாவது அறிவின் விஷயம் எதுவோ அதன் தன்மையை உள்ளபடியே காட்டுவதே அறிவு. (எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதே அறிவு.) ஆதலால், இரண்டாவது கருத்து, இரண்டாவது கோணம் என்றே ஒன்று இருக்க முடியாது. ஆகையால்தான் இந்த வியவஹார உலக விஷயங்களின் அறிவை உண்மையான அறிவு என்று கூற முடியாது; ஏனெனில், அவை மாற்றத்திற்கு உட்பட்டவை, பல்வேறு கோணங்களில் காணக்கூடியவை. ஆயினும், இந்த அறிவு, நம்முடைய அன்றாட வியவஹாரங்களுக்குப் போதுமானது.

என் கையில் இருப்பதைப் பாருங்கள். இது ஒரு மலர், சிவப்பு ரோஜா மலர். இதை நீங்கள் அறிந்தாலும், இதைப் பற்றிய — இது ஏன் இந்த நிறமாக உள்ளது? ஏன் இந்த மணத்தைக் கொண்டது? இதில் ஏன் முள் உள்ளது? என்பது போன்ற — எத்தனையோ விஷயங்களை நீங்கள் அறியவில்லை. ஆதலால், இந்த உலகில் உள்ள எந்தப் பொருளின் அறிவும் முழுமையானது அல்ல, அரைகுறை அறிவே ஆகும். எந்த ஒரு விஷயத்தின் அறிவை எடுத்துக் கொண்டாலும் 'இதன் எல்லைகளை நாம் கண்டுவிட்டோம், இதன் முழுமையான ஞானத்தை நாம் அடைந்து விட்டோம்' என்று ஒரு முற்றுப் புள்ளி வைக்க

முடியாது. முக்கால் புள்ளி, அரைப்புள்ளி, கால்புள்ளி முலியவற்றைத்தான் வைக்க முடியும்.

ஆதலால், அதிகம் அறிய அறிய, நாம் அறியாதது எவ்வளவு என்பது நமக்குத் தெரிய வருகிறது. இது எல்லோருக்குமே தெரிந்த உண்மை. ஒருவரை நாம் 'இவர் மிகுந்த அறிவாளி' என்று கூறலாம். ஆனால், அவருக்குத்தான் தெரியும், தான் அறியாத விஷயங்கள் எவ்வளவு என்று. (ஆதலால்தான் கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு என்று கூறுகிறோம்.) தான் எதை எல்லாம் அறிந்திருக்க வில்லை என்பதை அறியாத முட்டாளால்தான் தன்னை எல்லாம் அறிந்தவனாக எண்ணிக் கொள்ள முடியும். ஆகவே எந்த விஷய அறிவும் — உலகியல் அறிவும் முழுமையானதாக இருக்க முடியாது.

உதாரணத்திற்கு ஓர் அடர்ந்த காட்டை எடுத்துக் கொள்வோம். அந்தக் காட்டில் உள்ள செடிகொடிகள், மரங்கள், புதர்கள், மூலிகைகள், எவையெவை? எவை எல்லாம் சேர்ந்து இந்தக் காடாக ஆகியுள்ளன? அவற்றின் பெயர்கள் என்ன? இவற்றை எல்லாம் தெரிந்து கொள்வதே கடினம். அங்கு உள்ள மரம், செடி, கொடிகளின் பெயர்களைத் தெரிந்து கொண்டாலும், ஒவ்வொன்றும் மற்றவற்றிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது, எவ்வாறு செயல்படுகிறது, ஏன் ஒன்று குட்டையாகவும், மற்றொன்று நெட்டையாகவும் உள்ளது என்பதை எல்லாம் அறிவது அதைவிடவும் கடினம். இவ்வாறு ஆராய்ச்சி செய்வதற்கு எல்லையே இல்லை. ஒருவருடைய வாழ்நாள் முழுவதும் ஆராய்ச்சி செய்தாலும் அறிந்து கொள்ள முடியாது! ஆதலால்தான் (Ph.D) என்னும் முனைவர் பட்டப் படிப்புக்கு ஆராய்ச்சி செய்வதற்கு வேண்டிய விஷயங்களுக்குக் குறைவே இருப்பதில்லை. மேலும் ஆராய்ச்சி செய்யப்பட்ட விஷயங்களிலும், ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது தவறு என்றோ, அல்லது அதைவிட அதிகமாகக் கண்டு

*பிடித்தோ பட்டம் பெறலாம். ஆதலால், காடு போன்றவற்றின் ஒவ்வொரு பாகத்தையும் நுணுக்கமாக அறிவது கடினம்.*

*ஆனால், காடு என்றால் என்ன என்று ஒருவர் அறிய விரும்பினால், அதைக் காட்டுவது எளிது. அதற்கு நாம் செய்ய வேண்டியது எல்லாம் அவரை ஒரு காரில் காட்டு வழியே அழைத்துச் சென்று காட்டலாம்; அல்லது ஒரு ஹெலிகாப்டரில் அழைத்துச் சென்று காட்டலாம். அப்படிக் காட்டின் மொத்த உருவத்தையும் பார்த்தபின், அதில் மீண்டும் சந்தேகம் எழுவதற்கு வாய்ப்பு இல்லை.*

*ஆக, ஞானம் என்று ஒன்று ஸாத்யம் என்றால், அது முழுமையான ஒன்றைப் பற்றியதாகத்தான், பூரணமான ஒரு வஸ்துவைப் பற்றியதாகத்தான் இருக்க முடியும். அவ்வாறான ஞானத்தில் இருப்பதை மறுப்பதற்கோ, புதிதாகச் சேர்ப்பதற்கோ இடம் இல்லை. அந்த முழுமை என்பது பாகங்கள் அற்றதாக இருக்க வேண்டும். (காடு என்ற உதாரணம்கூட குறையுள்ள உதாரணமே ஆகும்.) எங்கு பாகங்கள் உண்டோ, அங்கு ஒவ்வொரு பாகத்தைப் பற்றியும் சிறிதளவு அறியாமையாவது இருந்தே தீரும்.* ***ஆதலால், முழுமையான வஸ்துவின் அறிவு மட்டும்தான் முழுமையான அறிவு ஆகும், ஞானம் ஆகும்!*** *முழுமையான வஸ்துவின் அறிவை நாம் பெறுவோமானால், அந்த அறிவை நாம் மற்றவருக்கும் போதிக்க முடியும். அவரும் அதை மற்றொருவருக்கு போதிக்க முடியும். இவ்வாறு வாழையடி வாழையாக குரு-சிஷ்ய பரம்பரையின் மூலம் அறிவு தொடர்ந்து வருவதை நாம் காணலாம்.*

## நான் பூரணமானவன்

***முழுமை என்பது என்னைக் காட்டிலும் வேறானதாக இருக்க முடியாது.*** *இந்தக் கூற்றின் உண்மையை நாம் ஆராய்ந்து பார்க்கலாம்.*

*குறிப்பிட்ட கொள்ளளவு கொண்ட ஒரு பானை உள்ளது. 'அடடா! நான் பத்து லிட்டர் அளவு மட்டுமே கொண்ட பானையல்லவா?' என்று அது நினைப்பதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது தன்னைவிடப் பெரிய பானையைப் பார்த்தால் அதற்கு நிச்சயமாகத் தாழ்வு மனப்பான்மையும், பொறாமையும் வரும். 'பார், நீ எவ்வளவு சிறியவன்' என்று பெரிய பானைகள் தன்னைக் குத்திக் காட்டுவதுபோல் உணர்கிறது. ஆதலால், அது தன்னைவிட சிறிய பானைகளுடன் மட்டுமே உறவாட முயல்கிறது. ஏனெனில், தான் உயர்ந்தவன் என்று அப்பொழுது உணர்கிறது. இவ்வாறு பொறாமையும், தாழ்வு மனப்பான்மையும் எழுவது சகஜமே. காரணம், எவருமே குறையுள்ளவராக, சிறியவராக இருக்க விரும்புவதில்லை.*

*எவ்வாறோ இந்த 10 லிட்டர் பானையானது எவ்வாறோ ஒரு மாறும் சக்தியைப் பெற்று, ஒரு 20-லிட்டர் பானையாக மாறி விடுகிறது. அப்பொழுது அது சில பெரிய பானைகளுடன் உறவாடும் அந்தஸ்தைப் பெறுகிறது. ஆயினும், இந்த நிம்மதி எத்தனை நாள்களுக்கு? ஒரு 30-லிட்டர் பானையைப் பார்க்கும் வரைதான். சரி, இந்தப் பானை இப்பொழுது 30-லிட்டர் பானையாக மாறிவிடுகிறது. அப்பொழுதும் 50-லிட்டர் பானைகளும், ஆயிரக்கணக்கான லிட்டர்கள் கொள்ளளவு கொண்ட 'டாங்கு'களும் இருக்குமே! ஆதலால், மாறிக்கொண்டு இருப்பதற்கு ஒரு முடிவே இல்லை.*

*இந்தப் பானை போன்றே மற்றொரு 10-லிட்டர் பானை இருக்கிறது. அதற்கும் தான் பெரியதாக ஆக*

வேண்டும் என்ற ஆசை உள்ளது. ஆனால், பெரியதாக வேண்டும் என்ற முயற்சியில் மற்ற பானைகள் பைத்தியம் பிடித்தவைபோல் ஈடுபடுவதைப் பார்க்கிறது. மாறிக் கொண்டே இருப்பதற்கு ஓர் எல்லை இல்லை என்பதையும் உணர்கிறது. அப்பொழுது அது சற்று நின்று நிதானமாகச் சிந்திக்கிறது, ‘உண்மையில் நான் விரும்புவது என்ன? பெரியதாக மாறிக் கொண்டே இருப்பதையா? அல்லது மாற வேண்டும் என்ற முயற்சியிலிருந்தே, மாற வேண்டிய தேவையிலிருந்தே விடுபடுவதையா? எதை?’

இவ்வாறான கேள்வி எழுந்தவுடன் அதன் விடையும் தெளிவாகத் தெரியத் துவங்குகிறது. “என் அளவைப் பெரியதாக்கிக் கொண்டே போவதால், நான் ஒருபொழுதும் எல்லையற்ற நிலையை அடைய முடியாது. நான் 10-லிட்டர் பானையாக இருக்கிறேன் என்பது பிரச்னை அல்ல. ‘நான் சிறியவன்’ என்ற என் உணர்வுதான் பிரச்னை. ஆதலால், பெரிய பானையாக ஆவதால் மட்டுமே, நான் சிறியவன் என்ற உணர்வு ஒரு பொழுதும் மறையப் போவதில்லை. ஏனெனில், நான் எவ்வளவு பெரியதாக ஆனாலும், அப்பொழுதும் என்னைவிடப் பெரியதான ஒரு பானை இருக்கும். அதைப் பார்த்தால் ‘நான் சிறியவன்’ என்ற உணர்வு எனக்கு மீண்டும் தோன்றத்தான் செய்யும்!

நான் பெரியதாக ஆக வேண்டும் என்றால், என்னைவிடப் பெரியதாக எதுவுமே இருக்க முடியாது என்ற அளவுக்குப் பெரியதாக ஆக வேண்டும். அதாவது அது ஓர் அளவற்ற, எல்லையற்ற நிலையாகத்தான் இருக்க வேண்டும். அப்படி ஒரு நிலை உண்டு என்றால், அது இப்பொழுதே, இங்கேயே என்னிடத்தில் இருக்க வேண்டும். அதாவது நானே அந்த எல்லையற்ற பூர்ணப் பொருளாக இருக்க வேண்டும். அப்படி என்றால், அதை நான் அறிந்து கொள்ள வேண்டும்!“

இப்பொழுது இந்தப் பானைக்கு ஒரு புதிய அறிவு பிறந்துள்ளது. தன்னைப் போலவே பிரச்னை இருந்து அதைத் தீர்த்துக்கொண்ட மற்றொரு பானையிடமிருந்து இந்தப் பானை உபதேசம் பெறுகிறது. அந்தப் பானை, தன் பிரச்னையை எவ்வாறு தீர்த்துக் கொண்டது? மற்றொரு குரு-பானையிடமிருந்து உபதேசத்தைப் பெற்றுக் கொண்டதன்மூலம்.

இந்தப் பானை பெறும் உபதேசம் என்ன? 'சிறியவன் என்ற உணர்விலிருந்து நீ விடுபட விரும்புகிறாய். எல்லையற்ற பூர்ண வஸ்துவாக ஆகவேண்டும் என்று நீ எண்ணுகிறாய். ஆனால், முழுமை என்பது உன்னிடமிருந்து வேறுபட்டதாக இருக்க முடியாது. அப்படி அது வேறுபட்டதாக இருந்தால், எல்லையற்ற பொருளிலிலிருந்து நீ வேறுபட்டு நிற்பதாலேயே அந்த 'எல்லையற்ற பொருள்' எல்லைக்கு உட்பட்டது ஆகிவிடுமே.'

அப்பொழுது இந்தப் பானை சிந்திக்கிறது, 'ஆமாம், இது உண்மைதான். எல்லையற்ற பொருளிலிலிருந்து நான் வேறானவன் என்றால், நான் எல்லைக்கு உட்பட்டவன் ஆகிறேன். அதே காரணத்தினாலேயே, அதாவது அந்த எல்லையற்ற பொருளிலிருந்து நான் தனித்து நிற்கும் காரணத்தினாலேயே, அதுவும் எல்லைக்குட்பட்டதாகி விடுகிறதே! ஆதலால், எல்லையற்றது என்று ஒன்று இருந்தால், அது என்னை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் அல்லவா!'

இப்பொழுது இந்தப் பானை உண்மையைப் புரிந்து கொண்டு விட்டது, ஞானம் பெற்றுவிட்டது. ஞானம் பெற்ற பின் அது என்ன கூறும்?

'நானே எல்லையற்ற வெளி, *limitless space.* என்னுள்ளேதான் அனைத்துப் பானைகளும் உள்ளன. பானைகள் மட்டுமா? அனைத்து உலகங்களும், அனைத்துக் கோள்களும், சூரிய மண்டலங்களும், அண்ட

*சராசரங்களும் என்னுள்ளேதான் உள்ளன. நான் பானை என்று எண்ணும்போதுதான் நான் எல்லைக்கு உட்பட்டவனாக உணர்கிறேன். ஆனால், நான் வெளியாக இருக்கிறேன் என்று பார்க்கும்போது, அந்த வெளியில்தான் அனைத்தும் உள்ளன. ஆதலால் — இம்மியும் அசையாமல், கண்ணைக்கூடக் கொட்டாமல் — எவ்விதமான முயற்சியும் இல்லாமல் நான் எங்கும் பரவியுள்ள, எல்லையற்ற வெளியாக இருக்கிறேன். நான் முழுமையான பொருள் என்பதை உணர்கிறேன்.'*

*'நான் பூர்ணமானவன்' என்ற உண்மையை நம்முடைய ரிஷிகள் கண்டுள்ளனர். இந்த உண்மையைப் பற்றிய அறிவுதான் ரிஷிகள் நமக்குத் தரும் உபதேசம். இதுதான் ஆர்ஷ வித்யா. (ஆர்ஷம் என்றால், ரிஷிகளைச் சேர்ந்தது; வித்யா என்றால், அறிவு.) ரிஷிகள் நமக்கு இந்த அறிவை மட்டும் தரவில்லை. இன்னும் எத்தனையோ அறிவுகளைத் தந்துள்ளார்கள். ஆனால், அவர்கள் நமக்குக் கொடுத்துள்ளவற்றில் இதுதான் மிகச் சிறந்ததாகும். ஏனெனில், இது பாமரர்கள் உட்பட அனைவரையும் ஈர்க்கிறது. இந்த அறிவுதான், இந்த ஆர்ஷ வித்யாதான் அதிசயமானது, அனைவராலும் விருப்பத்தக்கது. ஒருவர் இந்த ஞானத்தைப் பெற்று விட்டார் என்றால், அவரால் தான் கண்டதை மற்றவர்களும் காணச் செய்ய முடியும்.*

## குருசிஷ்ய பரம்பரை

*தான் அறிந்த விஷயத்தை இன்னொருவருக்குச் சொல்லிக் கொடுப்பதிலும் ஒரு ஸம்ப்ரதாயம் – வழிமுறை உள்ளது. இவ்வாறு முழுமையான பொருளைப் பற்றி மற்றவர்களுக்குப் புரிய வைக்க முடியும். பரமேச்வரனான ஸதாசிவனிடம் துவங்கி ரிஷிகள் வழியாக நமக்கு இந்த ஸம்ப்ரதாயம் வந்துள்ளது. கற்பிப்பிதற்கான இந்த ஸம்ப்ரதாயம், இந்த வழிமுறை எப்பொழுதும் ஒரே மாதிரியானது. இதில் மாற்றம் ஏதும் இல்லை. இதை*

*மாற்றவும் முடியாது; ஏனெனில், இது பகுதிகளற்ற பூரண வஸ்துவைப் பற்றிய அறிவாகும்.*

*எது பகுதிகள் உடையதோ அதைப் பற்றிய அறிவு மாறிக் கொண்டே இருக்கும். உதாரணமாக, பௌதீகத்தைப் பற்றி வேதத்தில் சொல்லியிருக்கும் சில விஷயங்கள் இன்றைய விஞ்ஞான கோட்பாடுகளின் அடிப்படையில் பார்த்தால் தவறாகத் தோன்றலாம். ஏனெனில், ஃபிஸிக்ஸ் – பௌதீகம் பகுதிகள் உடைய விஷயத்தைப் பற்றியதாகும். மேலும், ரிஷிகள் பௌதீகத்தைப் பற்றி அதிக கவனம் செலுத்தவில்லை. ஆதலால் அவர்கள் காலத்திலிருந்த பௌதீக அறிவிலிருந்து இன்றைய பௌதீக அறிவு மாறுபடலாம். காரணம், இவ்வாறான அறிவுகள் காலத்திற்குக் காலம் மாறுபட்டுக்கொண்டே இருக்கும். ஆதலால், பகுதிகள் உடைய அறிவுகளில் – அதாவது வேதியியல், புவியியல், பௌதீகம் போன்றவற்றில் – ஒருகாலத்தில் இதுதான் சரியான கோட்பாடு என்று கூறப்பட்டது, அதற்குப் பிந்தைய காலங்களில் தவறு என்று உணரப்பட்டதால் மாறலாம். ஆனால், பகுதிகள் அற்ற முழுமையான பொருளைப் பற்றிய அறிவு ஒருபொழுதும் மாறாது, மாற முடியாது. ஆதலால்தான் எவ்வித மாற்றத்திற்கும் அவசியம் இல்லாமல், இந்த அறிவை உள்ளதை உள்ளவாறே வாழையடி வாழையாக அளிப்பது ஸாத்யமாகிறது.*

*எவ்விதமான கல்வித்துறையிலும் குரு-சிஷ்ய பரம்பரை என்பது இருக்கத்தான் செய்யும். உதாரணத்திற்கு நீங்கள் உங்கள் பௌதீகப் பேராசிரியரிடமிருந்து பௌதீகம் கற்று, இப்பொழுது நீங்களே பேராசிரியராக இருக்கலாம். ஆனால், நீங்கள் மாணவப் பருவத்தில் கற்ற பல விஷயங்கள் இப்பொழுது மாறிவிட்டன ஆகையால், 'என்னுடைய ஆசிரியர் எனக்கு போதித்ததையே நான் இப்பொழுது போதிக்கிறேன்' என்று கூற முடியாது.*

இவ்வாறே நீங்கள் இப்பொழுது போதிப்பதையே உங்கள் மாணாக்கர்கள் போதிக்கப் போவதில்லை. இது எல்லா உலகிய கல்விக்கும் பொருந்தும்.

## அறியாமையை முழுவதாக நீக்குபவரே குரு

எவர் மற்றவருக்குக் கல்வியை அளிக்கிறாரோ அவர் குரு ஆவார். அந்தக் கல்வி இலக்கியம், இசை, நாட்டியம், நாடகம், மொழி போன்று எதைப் பற்றியதாகவும் இருக்கலாம். குரு என்றால் அறியாமையை நீக்குபவர். ஆதலால், எவர் அறியாமையை நீக்குகிறாரோ, அறியாமை எதைப் பற்றியதாக இருந்தாலும் சரி, அவரை குரு எனலாம்.

ஆனால், எந்தத் துறையிலுமே நம் அறியாமையை ஓரளவுதான் நீக்குகிறார்களே அன்றி அதை எவருமே முழுமையாக நீக்குவதில்லை. காரணம், அந்தத் துறைகளிலே அதிகம் கற்கக் கற்க, அந்தத் துறையில் நாம் அறியாதது எவ்வளவு என்ற பிரமிப்பு அதிகரிப்பதைத்தான் காண்கிறோம். ஆதலால், உலகிய துறைகளில் கல்வி போதிக்கும் ஆசிரியர்களை உண்மையில் குரு என்று கருத முடியாது. ஏனெனில், அவர்களில் எவருமே நம் அறியாமையை முழுமையாக நீக்குவதில்லை.

நம்முடைய அறியாமையை முழுமையாக நீக்க முடியும் என்றால், பகுதிகளற்ற பூர்ணப் பொருளைப் பற்றி போதிப்பவருக்குத்தான் அது ஸாத்யம். ஏனெனில், இங்கு அறியாமை என்பதும் பகுதிகளற்ற முழுமையான, ஒரே அறியாமையாகும்.

ஆதலால், முழுமையான பொருளைப் பற்றிய அறியாமையை நீக்குபவரைத்தான் நாம் குரு என்று கூற முடியும். அவ்வாறே இந்த அறிவுக்கான அறிவு ஸாதனத்தை மட்டுமே உண்மையில் ப்ரமாணம் என்று

கூற முடியும். ஏனெனில், இந்த அறிவை ஒரு முறை பெற்று விட்டால், அதை நீக்கவோ, மறுக்கவோ முடியாது. ஒருமுறை நன்கு அறிந்துவிட்டால், அது என்றுமே அறியப்பட்டதுதான்.

நம்முடைய ரிஷிகள் இத்தகைய ஞானத்தைப் பெறும் பாக்கியம் பெற்றிருந்தவர்கள். இறைவனே அவர்களுக்கு இந்த ஞானத்தை வெளிப்படுத்தியதாகச் சொல்லப்படுகிறது. ஏனெனில், ஞானம் என்பது ஒரு நாளும் புதிதாக உண்டாக்கப்படுவது அல்ல. அது என்றுமே உள்ளதாகும்.

## அறிவு என்றுமே உள்ளது

எந்த ஒரு ஸ்ருஷ்டியானாலும் அதைக் குறித்த அறிவு இருந்தே ஆக வேண்டும். இந்த அறிவு சேதனமான, உணர்வுள்ள ஒருவரிடம்தான் இருக்க முடியும். மேலும், அத்தகைய அறிவு அந்தப் படைப்புக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். துணி நெய்வதற்கான அறிவை வைத்துக் கொண்டு பானை செய்ய முடியாது. பானையைப் பற்றியதான அறிவை வைத்துக் கொண்டுதான் பானை செய்ய முடியும். ஆதலால், படைப்புக்கு முன்பு அதைப் பற்றிய அறிவு இருக்க வேண்டும். ‘முதன்முதலில் சொல் இருந்தது’ என்று கூறும்போது, சொல் என்பது அறிவைக் குறிக்கிறது. படைப்புக்கு முன் இந்தப் படைப்பு முழுவதையும் பற்றிய அறிவு இருந்தது என்பதையே அது குறிக்கிறது.

ஆதலால், இந்தப் படைப்புக்கு ஒரு ஸ்ருஷ்டி கர்த்தா இருந்தால், இந்த உலகை உண்டாக்கியவர் என்று ஒருவர் இருந்தால், அவருக்கு அதைப் பற்றிய முழு அறிவும் இருக்க வேண்டும். மேலும், அவர் சேதனமானவராக இருக்க வேண்டும். ஏனெனில், அறிவு என்பது சேதனமான வஸ்துவில்தான் இருக்க முடியும்.

ஆதலால், படைப்புக்கு முன்பும் அறிவு உள்ளது. படைப்புக்குப் பிறகும் அறிவு உள்ளது.

எவ்வாறு ஞானம் உள்ளதோ, அவ்வாறே அஜ்ஞானமும், அதாவது அறியாமையும் உள்ளது. இவை இரண்டும் ஒன்று சேர்ந்து இருப்பதுபோல் தோன்றுகிறது. அறிவு என்றும் உள்ளது. ஆனால், அது அறியாமையால் மூடப்பட்டுள்ளதால், நமக்குக் கிட்டுவதில்லை. எப்பொழுதெல்லாம் நாம் அறியாமையை நீக்குகிறோமோ அப்பொழுதெல்லாம் – எதைப் பற்றி அறியாமை இருந்ததோ அதைப் பற்றி – ஏற்கெனவே உள்ள அறிவையே வெளிப் படுத்துகிறோம். பிறக்கும்போது நாம் அனைவரும் அறியாமையுடன்தான் பிறக்கிறோம். பிறகு வாழ் நாளெல்லாம் அறியாமையை நீக்கிக் கொண்டே இருக்கிறோம். ஆதலால், எல்லா விஷயங்களைப் பற்றிய அறிவும் ஏற்கெனவே உள்ளது. அவ்வாறே முழுமையைப் பற்றிய அறிவும் ஏற்கெனவே உள்ளது. முழுமையைப் பற்றிய – பூரணமான வஸ்துவைப் பற்றிய – அறியாமையை நீக்குவதே குருவின் வேலை.

முதல் குரு யார்? பரம்பரையின் துவக்கத்தைக் காண முயலும்போது நாம் ரிஷிகள் வரை செல்லலாம். அதற்கு முன்பு? எல்லா அறிவும் இறைவனிடமிருந்தே வந்துள்ளது என்பதால், நாம் ஆதி குருவாக ஸதாசிவரை, தக்ஷிணாமூர்த்தியைக் குறிப்பிடுகிறோம். அவரிடமிருந்தே ரிஷிகளுக்கு இந்த ஞானம் வெளிப்படுத்தப்பட்டது. ரிஷிகள் இந்த ஞானத்தை உண்டு பண்ணவில்லை. அவர்கள் கண்டறிந்தார்கள். இவ்வாறு ரிஷிகளுக்கு வெளிப்படுத்தப்பட்டு, அவர்களிடமிருந்து வாழையடி வாழையாக இந்த அறிவு நமக்கு வருவதால், இது ஆர்ஷ வித்யா எனப்படுகிறது. ஆர்ஷ வித்யா என்றால், ரிஷிகள் கண்டறிந்து நமக்குத் தந்த வித்யை ஆகும்.

வேதங்கள் ரிஷிகளின் கூற்று. ஆதலால், ரிஷிகள் கண்டுணர்ந்ததே வேதங்கள் ஆகும். *Vedas have a vision of*

*life and also a way of life.* வேதங்களின் கூற்றுகள் வாழ்க்கையின் அடிப்படை தத்துவத்தைப் பற்றிய ஒரு தர்சனத்தைத் தருகின்றன. அத்துடன் வாழ்க்கை முறையைப் பற்றியும் கூறுகின்றன. நாம் பூரணமானவர் என்பது வேதங்கள் காட்டும் தரிசனமாகும். சரியான மனோபாவம், சரியான மதிப்பீடுகள் இவற்றுடன் வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதே வேதம் காட்டும் வாழ்க்கை முறையாகும். இவ்வாறான முறையில் வாழ்க்கையை வாழ்வது வேதம் காட்டும் தர்சனத்திற்கு நம்மைத் தயாராக்கும்.

## ஆர்ஷ வித்யா - தத்துவ தர்சனம்

மனிதர்கள் தன்னுணர்வு உடையவர்கள். நம்மில் ஒவ்வொருவரிடமும் இந்த உலகத்தைப் பற்றிய அறிவு உள் ளது. அத்துடன் தன்னைப் பற்றியும் அறிவு, அதாவது தான் என்ற தன்னுணர்வும் உள்ளது. தன்னுணர்வு உள்ளதால் தன்னைப் பற்றியே சில தீர்மானங்கள் செய்து வைத்திருக்கிறோம். இந்தத் தீர்மானம் சரியாகவோ, தவறாகவோ இருக்கலாம். ஆனால், இவ்வாறு தன்னைப் பற்றி ஒரு கருத்து கொள்வது என்பது தவிர்க்க முடியாதது. தன்னைப் பற்றிய கருத்துகளில் உலகத்தில் உள்ள அனைவருக்கும் பொதுவான சில கருத்துகள் உள்ளன. பெரும்பான்மையோரின் கருத்து, பொதுவான கருத்து என்பதனால் மட்டுமே ஒரு கருத்து உண்மை ஆகிவிடாது. *Universal conclusions*, உலகளாவிய பொதுக் கருத்துகள் சரியானதாகவும் இருக்கலாம், தவறானதாகவும் இருக்கலாம். உதாரணத்திற்கு ஒருகாலத்தில் ‘சூரியன் கிழக்கில் உதிக்கிறான், மேற்கில் மறைகிறான்’ என்பது ஓர் உலகளாவிய கருத்தாக இருந்தது. ஆனால், அது உலகளாவிய அறியாமை என்பது இன்று நிரூபணம் ஆகிவிட்டது.

அவ்வாறே 'நான் சிறியவன், வரையறுப்புகளுக்கு உட்பட்டவன், பாதுகாப்பற்றவன், பந்தப்பட்டவன்' என்று மனிதன் தன்னைப் பற்றி கொண்டுள்ள கருத்து உலகளாவிய கருத்தாக இருக்கிறது. இவ்வாறு தன்னைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தினால், அவனால் வீட்டிலோ, வெளியிலோ நிம்மதியாக இருக்க முடிவதில்லை. தன்னைப் பற்றி தான் கொண்டுள்ள இந்த உருவகத்தை எவ்வாறாவது மாற்ற வேண்டும் என்ற முயற்சியில் வாழ்க்கையே ஒரு போராட்டமாகி விடுகிறது.

அவ்வப்பொழுது இந்தக் கருத்தைத் தாற்காலிகமாக நீக்குவதில் மனிதன் வெற்றி பெறுகிறான். எப்போது? எவ்வாறு? எப்போதெல்லாம் தன்னையே மறக்கும்படியான ஓர் அனுபவத்தினால் ஈர்க்கப்படுகிறானோ அப்போது. அந்த அனுபவத்தில் அவன் முழுவதுமாக ஈடுபட்டு மூழ்கி இருக்கும்போது, அவனுடைய மனம் இவ்வாறான கருத்துகளை, 'காம்ப்ளெக்ஸ்'களை எல்லாம் மறந்து விடுகிறது. அந்த நேரத்தில் அவன் தன்னையும் ஏற்றுக் கொண்டு, ஈ, கொசு முதல் இந்த உலகில் உள்ள அனைத்தையும் ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியாக இருக்கிறான்.

ஆதலால், எப்பொழுதெல்லாம் நம்மை நம்மால் மறக்க முடிகிறதோ, அப்பொழுதெல்லாம் நம்மால் சந்தோஷமாக இருக்க முடிகிறது. ஆனால், எப்பொழுது நம்மைப் பற்றிய ஞாபகம் வருகிறதோ, அப்பொழுது நம்முடைய குறைகள் எல்லாம் ஞாபகத்திற்கு வந்து நம்முடைய சந்தோஷத்தைத் தொலைத்து விடுகின்றன. தன்னை மறக்கும்போதுதான் சந்தோஷமாக இருக்கிறோம் என்றால், தன்னை மறந்திருக்கக் கூடிய அனுபவங்களைத் தேடுவதிலேயே வாழ்நாள் முழுவதும் கழிந்து விடும். ஒரு ஸ்வாமிஜியைத் தேடிப்போனால் கூட அந்தத் தேடல் அவரிடமிருந்து ஒரு புதிய அனுபவத்தைப் பெறுவதற்குத்தான் என்றாகி விடுகிறது. ஆதலால்

*ஆன்மீகத் தேடல் என்பதும் புதுவிதமான அனுபவங்களைத் தேடுதல் என்பதாகி விடுகிறது.*

*நீ சந்தோஷமாக இருக்கும்போது என்ன நடக்கிறது? ஒரு குழந்தையை உன் கையில் வைத்திருக்கும்போது நீ சந்தோஷமாக இருக்கிறாய். இப்பொழுது உலகம் மறைந்து விடவில்லை. இங்குதான் இருக்கிறது. உன் எதிரே எது உள்ளதோ அதுதான் உன்னுடைய உலகம். ஆதலால், இப்பொழுது இந்தக் குழந்தைதான் உன் உலகம். இந்த நேரத்தில் உன்னுடைய மனம், நீ, உன்னுடைய தீர்க்கப்படாத பிரச்னைகள் இவை அனைத்துமே அப்படியே இருக்கின்றன .உண்மையில் எதுவுமே மறைந்து விடவில்லை. ஆனாலும் நீ சந்தோஷமாக இருக்கிறாய். காரணம்? இந்த நேரத்தில் நீ முழுமையை உணர்கிறாய். உனக்கும் உன்னெதிரே உள்ளதற்கும், உனக்கும் நீ அனுபவிப்பதற்கும் நடுவே எவ்விதமான பேதமோ, பிரிவினையோ இல்லை.*

*நீ அனுபவிப்பது இசையாக இருக்கலாம், நாட்டியம், நாடகம், புத்தகமாக இருக்கலாம். அல்லது சூரியோதயம், ஆகாசம், கடல் போன்ற இயற்கைக் காட்சியாக இருக்கலாம். ஒரு நகைச்சுவையாகவோ, அல்லது ஏதோ ஒரு புலனனுபவமாகவோ இருக்கலாம். நீ ஒன்றைப் பிரியத்தோடு அனுபவிக்கும்போது, அதற்கும் உனக்கும் இடையே எவ்விதமான பிரிவுக்கோடும் இல்லாமல் அதனுடன் நீ ஒன்றி விடுகிறாய். அப்பொழுது உனக்கு உன்னிடத்திலோ, நீ அனுபவிக்கும் விஷயத்திலோ எவ்விதமான எதிர்பார்ப்பும் இல்லை. மாறாக எதிரே இருக்கும் விஷயத்தின்மீது உனக்குப் பிரியம் இல்லை அல்லது அது இருப்பதிலிருந்து மாறுபட்டு இருக்க வேண்டும் என்று நினைக்கிறாய் என்றால், மாறுதலை எதிர்பார்க்கும் உன் எண்ணமே – உன் அஹங்காரமே – உனக்கும் அதற்குமிடையே ஒரு தடைச்சுவரை எழுப்பிவிடும்.*

ஆக, உன்னுடைய எதிர்பார்ப்புகள், உன்னுடைய காம்ப்ளெக்ஸ்கள், உன்னைப் பற்றி நீ கொண்டுள்ள சுய-உருவகம் இவை அனைத்தையும் நீ மறந்திருக்கும் போது, அங்கே பிரிவு காணும் அஹங்காரம் தாற்காலிகமாக விலகி நிற்கிறது. ஆதலால் இருப்பதெல்லாம் 'நீ' மட்டுமே, எவ்விதமான சிக்களும் அற்ற எளிமையான 'நீ' மட்டுமே அங்கு இருக்கிறாய். பேதம் காட்டுவதற்கு அங்கே ஏதும் இல்லை. இருப்பதெல்லாம் பூரணமான வஸ்து மட்டுமே ஆகும்!

வேதங்களோ 'நீதான் பூரண வஸ்து, முழுமையான பொருள்' என்று முழங்குகின்றன. நீ ஏற்கெனவே பூரணமானவன் என்றால், இந்த உண்மையை அறியும் வகையில் உன் வாழ்க்கை முறை அமைய வேண்டும்.

உண்மையில் வாழ்க்கையை வாழ்வாங்கு வாழப் பெற்றவன் யார்? *Who has made his life?* எவன் தன்னை முழுமையாக ஏற்றுக் கொள்கிறானோ அவனே! ஒருவன் தன்னை எப்பொழுது முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியும்? தான் பூரணமானவன் என்பதை உணர்ந்தறியும் போதுதான். தான் நன்கு வாழ வேண்டும் என்று விரும்பாதவர் எவர்? ஆதலால் அனைவருமே இந்த உண்மையை அறிந்து கொள்ள வேண்டும். இதை அறிந்து கொள்ள வகைசெய்யும் முறையில் ஒருவர் தன் வாழ்க்கையை நடத்த வேண்டும். அத்தகைய வாழ்க்கை முறை எது?

## ஆர்ஷ வித்யா - வாழ்க்கை முறை

செல்வமும் செல்வாக்குமே, பணமும் பதவியுமே முக்கியம் என்றால், இவற்றைத் தேடி அடைவதுதான் வாழ்க்கையின் குறிக்கோள்கள் என ஆகிவிடும். அவ்வாறே நாம் செய்யும் செயல்கள் எல்லாம் இவற்றை அடைவதற்காகவே, அதாவது இவற்றுக்கான ஸாதனங்களே என்றும் ஆகிவிடும். நம் வேதங்களோ

'வாழ்க்கையின் உண்மையான குறிக்கோள் இவற்றை அடைவது அல்ல; நீ பூரணன் என்பதை அறிவதே வாழ்க்கையின் குறிக்கோள்' என்று கூறுகின்றன. மேலும், 'இதில் செய்வதற்கோ, மாற்றுவதற்கோ ஏதும் இல்லை. ஏனெனில், நீ ஏற்கெனவே பூரணனாக உள்ளாய். ஆதலால், உன் வாழ்க்கை இதை அறிவதற்கு, இதை வெளிப்படுத்துவதற்கு ஏதுவாக அமைய வேண்டும்.' என்றும் கூறுகின்றன.

இந்த உண்மையை அறிந்துகொள்வதற்கு ஏற்றதாக உன் மனம் அமைய வேண்டும். அதற்கு மனமானது சிக்கலற்று எளிமையாக, சாந்தமாக, திருப்தியுள்ளதாக இருக்க வேண்டும்; மேலும், ஒருநிலைப்பட்டு ஆழ்ந்து சிந்திக்கும் திறன் படைத்ததாகவும் இருக்க வேண்டும். உன் மனம் விருப்பு, வெறுப்புகளின் வசத்தில் இருந்தால், அந்த விருப்பு, வெறுப்புகள்தாம் உன்னுடைய சந்தோஷத்தை நிர்ணயம் செய்யும். இவற்றைப் பூர்த்தி செய்வதைப் பொறுத்துதான் உன் சந்தோஷம் அமையும்! மேலும், இவை உன்னுடைய மனதை சதா அலைபாய்வதாகவும், சஞ்சலமுள்ளதாகவும், துக்கமுள்ளதாகவும் செய்து விடும். எந்த உண்மையை அறிந்து கொள்வதற்காக மனம் படைக்கப் பட்டதோ, அந்தக் குறிக்கோளை அடைவதற்கு இத்தகைய மனம் பயன்படாது.

மனம் அறிவை அடைவதற்கான ஸாதனம். 'நான் பூரணமானவன்' என்ற உண்மையை அறிந்துகொள்வதற்கு மனம் மாசற்று இருக்க வேண்டும். விருப்பு, வெறுப்புகளின் வசத்திலிருந்து விடுபடுதலே மனத்தூய்மை ஆகும். இப்படிப்பட்ட மனத் தூய்மையை அடைவதுதான் உண்மையான வளர்ச்சி, மேம்பாடு ஆகும். விருப்பு, வெறுப்புகளின் வசத்திலிருந்து விடுபட்டுத் தூய்மையான மனதை அடைவதற்கான சிறந்த வாழ்க்கை முறையை வேதங்கள் நமக்குக் காட்டுகின்றன. அதுதான்

கடமைகளை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறை.

இந்தப் பிரபஞ்சத்தை நோக்கும்போது, அது ஒழுங்காகவும், செம்மையாகவும் செயல்படுவதைக் காண முடிகிறது. ஒரு மிகப் பெரிய யஜ்ஞம், வேள்வி, நடப்பது போலும், இந்தப் பிரபஞ்சமே வேள்விசாலை போலும் தோன்றுகிறது. உலகைப் படைத்த இறைவன் அதைக் காப்பதற்கு இடைவிடாது செயல்படுகிறார். பகவான் விஷ்ணு காக்கும் கடவுளாகக் கூறப்படுகிறார். அவர் பாற்கடலில் பாம்பணையில் பள்ளி கொண்டிருப்பதாகச் சித்திரிக்கப்படுகிறார். அவர் ஒரு வேலையும் செய்யாமல் உறங்கிக் கொண்டிருக்கிறார் என்பதல்ல இதன் பொருள். மாறாக, இது அவர் எவ்விதமான சிரமும் இல்லாமல், உலகை அனாயாசமாகக் காக்கிறார் என்பதையே காட்டுகிறது.

நாம் இந்தப் பிரபஞ்சத்திலிருந்து வேறுபட்டவர்கள் அல்லர். ஆகவே நமக்கும் இந்தப் பிரபஞ்சத்தின் இயக்கத்தில் பங்கு, மற்றும் பொறுப்பு உண்டு. – எவ்வாறு நம் தேகத்தில் உள்ள ஒவ்வொரு சிறிய சுரப்பிக்கும் தேகத்தின் இயக்கத்தில் பங்கு உண்டோ அதுபோல. சுரப்பி சிறியதாக இருக்கலாம். ஆயினும் அது சரியாக வேலை செய்யாவிடில், உடலின் இயக்கம் தாறுமாறாக ஆகிவிடும்.

நாம் இந்தப் பிரபஞ்சத்தின் இயக்கத்தை வெறுமே வேடிக்கை பார்க்கும் சாக்ஷிகள் அல்லர். இந்த இயக்கத்தில் பங்கெடுப்பவர் ஆவோம். வெறும் சாக்ஷியாக மாத்திரம் இருக்க வேண்டும் என்றால், பார்க்க, கேட்க, முகர, ருசிக்க, தொட்டுணர இவற்றுக்கு வேண்டிய இந்த்ரியங்கள் கூடிய தலையுடன் மட்டுமே இறைவன் நம்மைப் படைத்திருப்பார். அப்பொழுது ஒவ்வொரு தலையும் மற்ற தலைகளையும், உலகத்தையும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும்; நாம் செய்வதெல்லாம்

வெறுமே பார்ப்பது, கேட்பது, முகர்வது, ருசிப்பது, தொடுவது மட்டுமே என்றாகிவிடும். ஆனால், நமக்கு இரு கைகளும், கால்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து நாம் செயல்பட வேண்டும், இந்த உலகத்தின் இயக்கத்தில் பங்கேற்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

ஒவ்வொரு ஜீவராசியும் இந்த உலகத்தின் இயக்கத்தில் பங்கேற்கிறது. மாமரம் மாங்கனிகளையும், எலுமிச்சை மரம் எலுமிச்சங்கனிகளையும் தருகிறது. பசுக்களும், கொசுக்களும்கூட அவை என்ன செய்ய வேண்டுமோ அதையே செய்கின்றன. அவற்றுக்குப் படைப்பில் என்ன பங்கு அளிக்கப்பட்டுள்ளதோ, அவை எவ்வாறு செயல்பட வேண்டும் என்று 'ப்ரோக்ராம்' செய்யப்பட்டுள்ளனவோ, வடிவமைக்கப்பட்டுள்ளனவோ, அவ்வாறே அவை செயல்படுகின்றன.

இவைகளைப் பார்த்து மனிதனும் தான் ஆற்ற வேண்டிய பணி என்ன, தனக்கான கடமை என்ன என்பதை அறிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில், மனிதனுக்கு சாய்ஸ் என்பது, அதாவது தேர்ந்தெடுக்கும் சக்தி என்பது கொடுக்கப்பட்டுள்ளது. ஆதலால், மனிதன் செய்யலாம், செய்யாமலும் இருக்கலாம். இப்படியும் செய்யலாம், அப்படியும் செய்யலாம். மிருகங்களுடையதுபோல் மனிதனுடைய மூளை இவ்வாறுதான் இயங்க வேண்டும் என்று 'ப்ரோக்ராம்' செய்யப்படவில்லை. ஆதலால், மனிதன் தன்னுடைய குறிக்கோளைத் தேர்ந்தெடுத்து, அதை அடைவதற்கு ஏற்றபடி செயல்பட வேண்டும்.

நீ ஏற்கெனவே பூரணமானவன் என்பதால், உன்னுடைய வாழ்க்கை முறை எதையாவது ஸாதிப்பதற்காக என்பதைவிட, இந்த உண்மையை அறிந்துகொள்வதற்காக என்று அமைய வேண்டும். புதிதாக ஸாதிப்பதற்கு ஏதும் இல்லை என்பதால், நீ எதைச் செய்கிறாய் என்பது முக்கியமல்ல, எப்படிச்

செய்கிறாய், எத்தகைய மனப்பான்மையுடன் செய்கிறாய் என்பதுதான் முக்கியம். சரியான மனோபாவத்துடன் செயலாற்றுவது உன்னை உன் விருப்பு, வெறுப்புகளின் வசத்திலிருந்தும், அதனால் ஏற்படக்கூடிய மனப் போராட்டங்களிலிருந்தும் விடுவிக்கிறது.

பகவத்கீதை இத்தகைய மனோபாவத்தை மிக அழகாக எடுத்துக்கூறுகிறது, 'எவரிடமிருந்து அனைத்துப் பொருள்களும் தோன்றியுள்ளனவோ, எவனால் இவை அனைத்தும் வியாபிக்கப்பட்டுள்ளனவோ, அவரைத் தனக்குரிய கர்மத்தினால் – கடமைகளை ஆற்றுவதன் மூலம் பூஜித்து, மனிதன் ஸித்தியை, மனப்பக்குவத்தை அடைகிறான்.'[2] 'இது என்னுடைய கடமை, இது இறைவன் எனக்கு இட்ட பணி' என்ற உணர்வோடு செய்யும்போது, உன்னுடைய செயலே இறை வழிபாடாகிறது. நீ உன்னை ஒரு சூழ்நிலையில் காண்கிறாய். அது இறைவன் அமைத்துத் தந்த சூழ்நிலை என்றும், அங்கு செய்ய வேண்டியது என்ன என்பதையும் உணர்ந்து உற்சாகத்துடன் செயல்படுகிறாய். ஏனெனில், அதுவே உன்னுடைய கடமை. இங்கு நீ எதை ஸாதிக்கிறாய் என்பது முக்கியமல்ல. செய்வதை ஒழுங்காகச் செய்கிறாயா என்பதுதான் முக்கியமாகிறது.

செய்வதுதான் முக்கியம் என்பதால், செயலில் உயர்வு, தாழ்வு என்பதே இல்லை. இது இறைவனின் படைப்பு. அதன் இயக்கத்தில் நீயும் ஒரு சிறிய பங்கை ஏற்பவன். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் உன்னைக் காண்கிறாய் என்றால், அதற்கு ஓர் அர்த்தம் இருக்க வேண்டும். அந்தச் சூழ்நிலை உன்னிடமிருந்து ஒரு செயலை, ஒரு பங்கேற்பை எதிர்பார்க்கிறது. அந்தப் பணியை நீ செய்ய வேண்டும். இதை உணர்ந்து கொண்டு

---

[2] யத: ப்ரவ்ருத்திர்பூ$_4$தாநாம் யேந ஸர்வமித$_3$ம் ததம்।
ஸ்வகர்மணா தமப்$_4$யர்ச்ய ஸித்$_3$தி$_4$ம் விந்த$_3$தி மாநவ: ।। பக. கீதை 18-46

நீ செயல்படும்போது, உன்னுடைய செயல் இறைவனுக்கு அர்ச்சனை, ஆராதனை ஆகிறது. இதுவே கர்மயோகம்.

நீ எதிர்கொள்ளும் சூழ்நிலைகள் உன்னிடமிருந்து ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டை எதிர்பார்க்கின்றன. அதன்படிப் செயல்படும்போது, உன்னுடைய விருப்பு, வெறுப்புகளை நீ பின்னுக்கு ஒதுக்குகிறாய். ஆதலால், நீ விருப்பு, வெறுப்புகளின் வசத்தில் செயல்படுவதில்லை. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் நீ செய்ய விரும்புவது ஒன்றாக இருக்கலாம்; நீ செய்ய வேண்டியது மற்றொன்றாக இருக்கலாம். அப்பொழுது உன் விருப்பு, வெறுப்புகளை ஒதுக்கி வைத்து விட்டு, உனக்குப் பிடிக்கவில்லை என்றாலும், செய்ய வேண்டியது எதுவோ அதைச் செய்கிறாய். இதுதான் கடமை.

நம் விருப்பத்திற்கு ஒத்ததாக இல்லாவிடிலும், எது செய்யப்பட வேண்டியதோ, அதுவே நம் கடமை. நம்முடைய விருப்பமும், நம் கடமையும் ஒன்றாக இருந்தால், கடமையைச் செய்வது எளிதாகிறது. நம்முடைய விருப்பம் ஒன்று, கடமை வேறு என்றால், கடமையைச் செய்வதற்கு அதிக முயற்சி, அதிக மனத்திண்மை வேண்டும். விருப்பத்திற்கு ஒட்டி இருந்தாலும் சரி, மாறாக இருந்தாலும் சரி, கடமையையே முக்கியமாகக் கருதிச் செய்வதே கர்மயோகம்.

மாறாக, ஒன்று சரியானதா, இல்லையா என்பதை கவனிக்காது, நம் விருப்பப்படியே செயல்படுவது, உணர்ச்சி வசப்பட்டச் செயலாகும். உணர்ச்சி வசத்தில் செயல்படும் ஒருவன் தன் விருப்பு, வெறுப்புகளுக்கு அடிமையாகிறான். ஆதலால், அவன் மனம் அதிக போராட்டங்களையும், குழப்பத்தையும் உடையதாகிறது. மனத்திண்மையுடன் எது சரியோ, அதைத் தேர்ந்தெடுத்துச் செயல்படும்போது, மனமானது விருப்பு, வெறுப்புகளின் வசத்திலிருந்து விடுபட்டு, நாளடைவில், அவற்றைத் தன் வசத்தில் வைத்துக் கொள்கிறது.

ஆதலால், விருப்பு, வெறுப்புகளின் வசத்திலிருந்து விடுபட்டு, அவற்றைத் தன் வசத்தில் வைப்பது என்பதே இங்கு கூறப்படும் ஸித்தி ஆகும். இத்தகைய ஸித்தியை அடைந்த மனம் போராட்டம், சஞ்சலம் முதலியவற்றிலிருந்து விடுபட்டதாக ஆகிறது. இத்தகைய மனமே பூரண வஸ்துவை அறிவதற்கும், பூரண சுதந்திரத்தை அனுபவிப்பதற்கும் தகுதி பெற்ற கருவியாகிறது. பூரணப் பொருளை காட்டும் அறிவும், அதை அறிவதற்கான தகுதியைப் பெறும் வழியைக் காட்டும் அறிவும் ஆர்ஷ வித்யா என அழைக்கப்படுகிறது.

## இறுதிக் கூற்று

ஆர்ஷ வித்யா எனப்படும், ரிஷிகள் வழியே வரும் இந்த அறிவுரையானது ஒரு மிகவும் ஒப்பற்ற திருஷ்டியாகும். ஏனெனில், இதைவிட உயர்ந்ததான திருஷ்டி இருக்க முடியாது. இந்த திருஷ்டியை இதைவிட உயர்ந்ததாக எவராலும் செய்ய முடியாது. மற்றவர் எல்லோரும் 'நீ மிகச் சிறியவன், அழியக் கூடியவன், நீ முழுமையின் ஒரு சிறு பகுதி' என்றெல்லாம் கூறும்போது, ரிஷிகள் 'நீ பூரணமானவன்' என்று கூறுகிறார்கள். இதைவிட உயர்வாக எவரால் கூற முடியும்? இதை இல்லை என்று நிரூபிக்கவோ, மேம்படுத்தவோ, திருத்தி அமைக்கவோ எவராலும் முடியாது.

'நீயே இந்தப் படைப்பின் அடைப்படை உண்மை' என்று அவர்கள் கூறுவதே இறுதியான கூற்றுமாகும். இதைப் பற்றி வேறு எவ்விதமான அபிப்ராயமும் இருக்க முடியாது என்பதால், இது முடிந்த முடிவாகும். ஏனெனில், முழுமை, பூரணம் என்பது காலத்திற்கு அடங்கியது அல்ல. காலத்தினால் அது மாறுபடாது என்பதால், அது எவ்விதமான புதிய கொள்கைக்கும் உட்பட்டதாக இருக்க முடியாது. ஆதலால்தான், குருவானவர் அதை எவ்விதமான மாறுதலும் இன்றி

உள்ளபடியே சிஷ்யனுக்கு போதிப்பது ஸாத்யமாகிறது. ஆதலால்தான் இது எவ்வித மாறுதலும் இன்றி உள்ளபடியே பரம்பரையாக வந்துகொண்டிருப்பதும் ஸாத்யமாகிறது.

இந்த ஒன்றைத்தான் உண்மையில் ஞானம், அறிவு என்று கூற முடியும். ஏனெனில், இது ஒன்றைத்தான் புதிய அறிவின் அடிப்படையில் தவறு என்று நிரூபிக்கவோ, மேம்படுத்தவோ, திருத்தவோ முடியாது. ஆதலால், இத்தகைய அறிவைத் தருவதன்மூலம் நம் முழு அறியாமையையும் நீக்குபவரைத்தான் உண்மையில் குரு என்று கூறமுடியும்.

பூரணம் என்பது நானாக இருப்பதால். இந்த அறிவைப் பெற வேண்டுமா என்று சிந்திப்பதற்கு அவசியம் இல்லை. இதை நம்மில் ஒவ்வொருவரும் அடைந்தே ஆகவேண்டும் என்பதில் எவ்விதமான சந்தேகமும் இருக்க முடியாது.

**ஓம் தத் ஸத்**

